Frühförderung
**Stadt Bern**




# Deutsch lernen vor dem Kindergarten

primano

# சிறுவர் முன்பள்ளி (கிண்டர்கார்டென்) க்கு முன் ஜேர்மன் மொழியைக் கற்றுக்கொள்ளல்

பேர்ண் நகரம் அனைத்துப் பிள்ளைகளும் பாடசாலையில் அதி உச்ச வாய்ப்புக்களைப் பெறவேண்டுமென விரும்புகின்றது. வெற்றிகரமானதொரு படசாலையின் தொடக்கத்திற்கு சிறந்த ஜேர்மன் மொழியறிவு மிக முக்கியமாகும். „சிறுவர் முன்பள்ளி (கிண்டர்கார்டென்) க்கு **முன்** ஜேர்மன் மொழியைக் கற்றுக்கொள்ளல்" என்ற ஊக்குவிப்புத் திட்டமானது சிறிளவு ஜேர்மன் பேசக்கூடிய அல்லது ஜேர்மன் முற்றிலும் பேசத் தெரியாத பிள்ளைகளுக்கு உதவுகின்றது.

### உங்கள் குழந்தையின் ஜேர்மன் மொழி அறிவை எவ்வாறு நிர்ணயிப்பது?

உங்களது பிள்ளை சிறுவர் முன்பள்ளிக்கு செல்வதற்கு 18 மாதங்களுக்கு முன் பெற்றோராகிய நீங்கள் தபால் மூலம் ஒன்லைன் இனூடாக வினாக்கொத்துடன் (12 மொழிகளில் இது கிடைக்கின்றது) கூடிய லிங்க் எனப்படும் இணைப்பை உள்ளடக்கிய கடிதமொன்றைப் பெற்றுக் கொள்வீர்கள். இதன் மூலம் உங்கள் குழந்தையின் ஜேர்மன் மொழியறிவை நீங்களாகவே மதிப்பீடு செய்ய முடியும். இவ் வினாக்கொத்து இரகசியமாகக் கையாளப்படுவதுடன் நகர சுகாதார சேவை, முன்கூட்டியே ஊக்குவிப்பு ப்ரிமானோ இல் மதிப்பீடு செய்யப்படுகின்றது. உங்கள் குழந்தைக்கு மொழிஊகுவிப்பு ஜேர்மன் மொழியில் தேவைதானா என்பதை இம் மதிப்பீடு காண்பிக்கின்றது. எப்படியாயினும் நீங்கள் எம்மிடமிருந்து ஒரு பின்னூட்டக் கடிதமொன்றைப் பெற்றுக்கொள்வீர்கள்.

### உங்கள் குழந்தை எங்கே ஜேர்மன் மொழியைக் கற்க முடியும்?

உங்கள் குழந்தைக்கு மொழிஊக்குவிப்பு தேவைப்படின், சிறுவர் முன்பள்ளியில் அனுமதிக்கப்படும் வரை ஒரு கிற்றா (Kita) அல்லது குழந்தைகள் விளையாட்டுக் குழுவுக்கு (Spielgruppe) செல்ல முடியும். உங்கள் குழந்தை அங்கு ஜேர்மன் மொழியை விளையாட்டாக கற்கின்றது. நகரமும் மாநிலமும் உங்களுக்கு நிதி ஒதுக்கீட்டில் உதவுகின்றன. பெற்றோரின் பங்களிப்பானது உங்கள் வருமானத்தில் தங்கியுள்ளது.

### பெற்றோர் என்ற ரீதியில்  நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

பெற்றோருக்கான கடிதத்திலிலுள்ள அறிவுரைக்கமைய வினாக்கொத்தை நீங்கள் பூர்த்தி செய்யுங்கள். உங்கள் குழந்தை அடுத்த வருடம் ஆவணி மாதம் சிறுவர் முன்பள்ளிக்கு செல்வதாயின், நீங்கள் பெற்றோருக்கான கடிதத்தினை தை மாதத்தில் பெற்றுக்கொள்வீர்கள். உங்கள் குழந்தை ஏற்க்கனவே ஒரு கிற்றா அல்லது குழந்தைகள் விளையாட்டுக் குழுவுக்கு சென்றுகொண்டிருந்தாலும் கூட, தயவு செய்து நீங்கள் வினாக்கொத்தை பூர்த்தி செய்யுங்கள்.

### அத்துடன் மிகவும் முக்கியமானது:

ஆரம்பகால மொழிக்கல்விக்கு முதலாவது மொழி மிக முக்கியமாகும். பெற்றோர் என்ற ரீதியில் உங்கள் குழந்தையுடன் நீங்கள் தாய்மொழியில் அதிகம் பேசி விளையாடுவதுடன் கதைகளை விளக்கிக் கூறுதல் அல்லது வசனங்கள் மற்றும் இசையை நயத்துடன் கற்பிப்பதன் மூலம் உங்கள் குழந்தையின் மொழிவளர்ச்சிக்கு நீங்கள் ஒரு முக்கிய பங்களிப்பை நல்குகின்றீர்கள். உங்கள் குழந்தை சகல ஏனைய மொழிகளையும் கற்பதற்கு இதுவே அடித்தளமாகும்.

### நீங்கள் மேலதிக தகவல்களை எங்கே பெற்றுக்கொள்ளலாம்?

www.primano.ch/deutsch-lernen




**Gesundheitsdienst der Stadt Bern**
Frühförderung primano
Monbijoustrasse 11, 3011 Bern
079 900 18 69